# மாலைக்கதிர்


Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 18 புதன்கிழமை 02.07.2025 கதிர் 242



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - யாழ் முற்றம் Yarl Muttram Youtube Channel



## அர்ச்சுனாவின் எம்.பி. பதவிக்கு எதிரான மனு ஆகஸ்ட் முதலாம் திகதி வரை ஒத்திவைப்பு!

### இடைக்காலத் தடை உத்தரவு விதிக்க நீதிமன்றம் மறுப்பு

கொழும்பு, ஜூலை 02

வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்வதற்கு உத்தரவிடுமாறு கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று புதன்கிழமை தீர்மானித்துள்ளதுடன் அந்த மனு மீதான விசாரணையை எதிர்வரும் ஆகஸ்ட் முதலாம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

அர்ச்சுனாவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்வதற்கு உத்தரவிடுமாறு

7➤

# இலங்கைக்கு இந்தியா நிபந்தனையற்ற உதவி

## பதிலுக்குத் தாங்கள் எதையும் கேட்பதில்லை என்கின்றார் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா



கொழும்பு, ஜூலை 02

இந்தியாவானது இலங்கைக்கு நிபந்தனையற்ற உதவிகளையே வழங்கி வருகின்றது எனவும், செய்யும் உதவிகளுக்குப் பதிலுக்கு நாங்கள் எதையும் கேட்பதில்லை எனவும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

நம்பிக்கை மற்றும் நல்லெண்ணத்தை வளர்ப்பதிலும், இரு நாடுகளுக்கும் பரஸ்பர நன்மை பயக்கும் நீடித்த உறவுகளை உருவாக்குவதிலும் இலங்கையின் உதவி மட்டுமே எங்களுக்குத் தேவையாகும் எனவும் அவர் கூறினார்.

7➤

## ஆலயத்தில் மின்சாரம் தாக்கி 16 வயது சிறுவன் உயிரிழப்பு



மட்டக்களப்பு, ஜூலை 02

மட்டக்களப்பு, முனைக்காடு கிராமத்தில் இன்று புதன்கிழமை மின்சாரம் தாக்கி 16 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

7➤

## ஓமந்தையில் ரயில் மோதி தாயும் மகளும் படுகாயம்

ஓமந்தை, ஜூலை 02

வவுனியா, ஓமந்தை - பறநாட்டாங்கல் பகுதியில் ரயில் - மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இன்று இடம்பெற்ற இந்த விபத்து தொடர பாக மேலும் தெரியவருவதாவது,

7➤





## தேசபந்து மீதான குற்றச்சாட்டுக்கள்: இரு தரப்பு விசாரணைகளும் முடிவு

கொழும்பு, ஜூலை 02

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனினால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் துர்நடத்தை மற்றும் பதவிக்கான அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட குழுவின் பிரதிவாதியான பொலிஸ்மா அதிபர் மற்றும் முறைப்பாட்டாளரின் சாட்சியங்கள் மீதான விசாரணைகள் முடிவுக்கு வந்தன.

உயர்நீதிமன்ற நீதியரசர் பி.பி. சூரசேனவின்

7➤

## நிந்தவூர் பிரதேச சபையை கைப்பற்றியது ரிஷாத் அணி

### தவிசாளராக ஆதம்பாவா அஸ்பர் தெரிவு

நிந்தவூர், ஜூலை 02

அம்பாறை, நிந்தவூர் பிரதேச சபையின் புதிய தவிசாளராக இரகசிய வாக்குமூலத்தின் அடிப்படையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஆதம்பாவா அஸ்பரும்,

7➤



# தே.ம.ச க்கும் இ.தொ.காவிற்கும் இடையில் பேச்சுவார்த்தை!

கொழும்பு, ஜூலை 02

“நுவரெலியா மாவட்டம் உட்பட பல்வேறு மாவட்டங்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்வும், தேசிய மக்கள் சக்தியும் புரிந்துணர்வின் அடிப்படையில் உள்ளூராட்சிமன்றங்களில் ஆட்சியமைத்துள்ளன.

குறிப்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அதிகமான உறுப்பினர்களை பெற்றுக்கொண்ட சபைகளில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்வும், தேசிய மக்கள் சக்தி அதிகமான உறுப்பினர்களை பெற்றுக்கொண்ட இடங்களில் தேசிய மக்கள் சக்தியும் ஆட்சியமைக்கும் என்ற அடிப்படையில் இந்தப் புரிந்துணர்வு எட்டப்பட்டது.

குறிப்பாக நுவரெலியா மாநகர சபை, வலப்பனை, அங்குராகெத்த, தலவாக்கலை,ஹட்டன் டிக்கோயா நகரசபை, கொத்மலை ஆகிய இடங்களில் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைப்பதாகவும், நுவரெலியா பிரதேச சபை,கொட்டகலை பிரதேச சபை, அக்கரப்பத்தன பிரதேச சபை, நோர்வுட் பிரதேச சபை ஆகிய இடங்களில் இ.தொ.கா ஆட்சி அமைப்பாகவும் புரிந்துணர்வு எட்டப்பட்டது.

இந்த நிலையில், நோர்வூட் பிரதேச சபையில் .இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அதிக ஆசனங்களை பெற்றிருந்தும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் ஏனைய தரப்புடன் இணைந்து ஆட்சியமைத்துள்ளனர். இந்த விடயம் தொடர்பில் தேசிய மக்கள் சக்தியுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

நோர்வூட் பிரதேச சபையில் போட்டியிட்ட ஏனைய கட்சிகளை விட அதிகமான வாக்குகளை பெற்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முதலிடத்தை பெற்றதனால், மக்கள் ஆணையை தேசிய மக்கள் சக்தி மதிப்பதாகவும், மக்கள் ஆணையை நிலைநாட்டுவதற்கான தேவையான நடவடிக்கையை மேற்கொள்வதாகவும் இக்கலந்துரையாடலின் போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமானிடம் தெரிவித்தனர்.

மேலும், விரைவில் நோர்வூட் பிரதேச சபையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ். ஆட்சியமைக்கும்.“ என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார். (ஐ)

# இலங்கை வருகின்றார் ஷாருக்கான்




பிரபல பாலிவூட் நடிகர் ஷாருக்கான் இலங்கை வருவது உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**City of Dreams SriLanka** திட்டத்தின் தொடக்க விழாவில் இவர் விசேட விருந்தினராக கலந்து கொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள ஊவைல ழக னுசநயஅள ளுசடையமெய,

ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் **(JKH)** மற்றும் மெல்கோ ரிசார்ட்ஸ் ரூ என்டர்டெயின்மென்ட் ஆகியவற்றின் தனித்துவமான திட்டமான இது, அனைத்து வசதிகளையும் கொண்ட தெற்காசியாவின் முதல் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட சுற்றுலா ஹோட்டல் வளாகமாகவும், தனியார் துறையால் செய்யப்பட்ட மிகப்பெரிய முதலீடாகவும் கருதப்படுகிறது.

சர்வதேச தரநிலைகள் மற்றும் அனைத்து வசதிகளையும்கொண்ட ஒரு கேசினோ ஹால், சூப்பர் சொகுசு **Nüwa** ஹோட்டல் வளாகம் மற்றும் ஷொப்பிங் மால் ஆகியவற்றைக் கொண்ட இந்த திட்டம், தெற்காசிய சுற்றுலா மற்றும் ஆடம்பர ஹோட்டல் துறையில் ஒரு தனித்துவமான மைல்கல்லைக் குறிக்கிறது.

இலங்கையின் பொருளாதாரத்தின் மையமான கொழும்பின் மையத்தில் அமைந்துள்ள இந்த ஆடம்பர சுற்றுலா ஹோட்டல் வளாகம், சிறந்த ஹோட்டல்கள், உலகத்தரம் வாய்ந்த பொழுதுபோக்கு, ஷொப்பிங் மற்றும் **MICE (Meetings Incentives Conferences and Exhibitions)** அனுபவங்களை ஒரே இடத்தில் ஒன்றிணைக்கிறது.




# விஸ்கி மற்றும் சிகரெட்டுகளுடன் இருவர் கைது



கொழும்பு, ஜூலை 02


இரண்டு கோடி ரூபாய் பெறுமதியுடைய விஸ்கி மற்றும் சிகரெட்டுகளை சட்டவிரோதமாக கொண்டு வந்து, "கிரீன் சேனல்" வழியாக கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியே கொண்டு வர முயன்ற இருவர் செவ்வாய்க்கிழமை இரவு விமான நிலைய சுங்க அதிகாரிகள் குழுவால் கைது செய்யப்பட்டனர்.


அவர்கள் வர்த்தகர்கள் என தெரியவந்துள்ளதுடன் அதில்ஒருவர்கொழும்பில்வசிக்கும்30 வயதுடையவர் எனவும் மற்றையவர் எட்டியாந்தோட்டையைச் சேர்ந்த 36 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர்கள் துபாயிலிருந்து எமிரேட்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்துள்ளதுடன் அவர்களின் பயணப் பைகளை சோதனையிட்ட போது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட "மான்செஸ்டர்" சிகரெட்டுகள் 116,200 அடங்கிய 581 அட்டைப்பெட்டிகள், துபாய் விமான நிலைய வரி இல்லாத வணிக வளாகத்தில் இருந்து வாங்கப் பட்ட 117 விஸ்கி போத்தல்கள் கைப்பற்றப்பட் டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

# சொகுசு பஸ் லொறியில் மோதி கோர விபத்து





கொழும்பு, ஜூலை 02


தென்னிங்கை மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் 76.5 ஆவது கிலோமீற்றர் மைல்கல் அருகில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 07 பேர் காயமடைந்துள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர். இந்த விபத்து இன்று (02) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

சொகுசு பஸ் ஒன்று மோட்டார் சைக்கிள்களை ஏற்றிச் சென்ற லொறி ஒன்றின் பின்புறத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது சொகுசு பஸ்ஸில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 07 பேர் காயமடைந்துள்ளனர்.

விபத்தில் காயமனைட்தவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# சிறுபோக நெல் அறுவடை தொடர்பில் அறிவிப்பு



சிறுபோக அறுவடை ஏற்கனவே தொடங்கியுள்ள நிலையில், அதன்படி, நாளை (03) முதல் அரசு களஞ்சியசாலைகள் அறுவடை இடங்களில் திறக்கப்பட்டு நெல் கொள்முதலை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

விவசாய மற்றும் கால்நடை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.


நெல் சந்தைப்படுத்தல் சபை மற்றும் பிற குழுக்களுடன் சமீபத்தில் நடைபெற்ற கூட்டுக் கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக கூறிய பிரதியமைச்சர், அதன்படி, அம்பாறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் வடமேல் மற்றும் தென் பிரதேசங்களில் நெல் கொள்முதல் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் தற்போது நெல் கொள்முதல் செய்வதற்கு 600 மில்லியன் ரூபாய் இருப்பு உள்ளது என்றும் அவர் கூறினார்.

ஒரு கிலோ நாட்டு நெல் ரூ.120க்கும், ஒரு கிலோ சம்பா நெல் ரூ.125க்கும், ஒரு கிலோ கீரி சம்பா நெல் ரூ.132க்கும் அரசு களஞ்சியசாலைகளில் கொள்வனவு செய்யப்படும் என்றும், இந்த களஞ்சியசாலைகளுக்கு அனைத்து விவசாயிகளும் தரப்படுத்தப்பட்ட நெல்லை வழங்க முடியும் என்றும் பிரதி அமைச்சர் கூறினார்.

இதற்கிடையில், இந்த முறை ஈரமான நெல்லுக்கும் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன், அதன்படி, ஒரு கிலோ நாட்டு நெல் ரூ. 102, ஒரு கிலோ சம்பா நெல் ரூ. 105 மற்றும் ஒரு கிலோ கீரி சம்பா நெல் ரூ. 112 என விவசாயிகள் விற்பனை செய்யலாம்.

அரசு களஞ்சியசாலைகளில் ஈரமான நெல்லை பெற முடியாத நிலை இருப்பதாகவும் கூறிய பிரதியமைச்சர், விவசாயிகள் அநீதி இழைக்கப்படாமல் இருக்க அனைவரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரினார். (ஐ)



# ஊழல் எதிர்ப்புக்கு ஜப்பான் நிதியுதவி

கொழும்பு, ஜூலை 02

ஊழல் எதிர்ப்பு வழிமுறைகளை வலுப்படுத்துவதற்காக ஜப்பான் அரசு இலங்கைக்கு 2.5 மில்லியன் ரூபாய் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மேம்பாட்டுத் திட்டத்தின் உதவியுடன் பொது நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை ஊக்குவிக்கும் மூன்று ஆண்டு திட்டத்தை செயல்படுத்த ஜப்பான் அரசு இந்தத் தொகையை வழங்கியுள்ளது.

ஊழல் எதிர்ப்பு பொறிமுறையை நிறுவுவதன் மூலம் ஊழல் நடைமுறைகளைக் கையாள்வதற்கான ஒரு பொறிமுறையை நிறுவுவது தொடர்பாக இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இதற்கான ஒப்பந்தம் இலங்கைக்கான ஜப்பான் தூதர் மற்றும் இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மேம்பாட்டுத் திட்டத்தின் வதிவிடப் பிரதிநிதி இடையே இலங்கையில் உள்ள ஜப்பான் தூதரகத்தில் கையெழுத்தானது. (ஐ)



# உயர் தரத்தில் உயர் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு கிடைத்துள்ள வாய்ப்பு

*உயர் தரப் பரீட்சையில் அதிக மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு, உயர் சர்வதேச தரவரிசையுடன் கூடிய வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தில் தமது முதலாவது பட்டப்படிப்பைத் தொடர உதவித்தொகை வழங்கும் திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.*

*அரச கொள்கைப் பிரகடனத்திற்கமைய 'நாகரிகமான பிரஜை – முன்னேற்றகரமான மனிதவளத்தை' உருவாக்கும் நோக்கத்தை அடைவதற்காக க.பொ.த (உ/த) பரீட்சையில் உயர்வான தேர்ச்சியைப் பெறுகின்ற மாணவர்கள் தமது முதலாவது பட்டப்படிப்பை சர்வதேச ரீதியாக உயர் தரப்படுத்தலுடன் கூடிய வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் தொடர்வதற்குத் தேவையான புலமைப்பரிசிலை வழங்கும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட யோசனை மூலம் 200 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.*

*இப்புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தின் கீழ் சர்வதேச தரப்படுத்தல் குறிகாட்டிகளில் முதல் 500 இடங்களைப் பிடித்துள்ள, ஆங்கில மொழியில் கற்பித்தல்களை மேற்கொள்கின்ற வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் 04 ஆண்டுகள் பட்டப்படிப்புக்களைப் பூர்த்தி செய்வதற்குப் புலமைப்பரிசில்களை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.*

*அதன் முதலாம் கட்டத்தின் கீழ் 2025 ஆண்டுக்காக 20 தொடக்கம் 50 மாணவர்களைத் தெரிவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.*

*க.பொ.த பரீட்சையில் பிரதான பாடத்துறைகளின் கீழ் உயர்வான இசட் புள்ளிகளைப்* **(Z-Score)** *பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கு விண்ணப்பிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்படுகின்றது.*

*குறித்த விண்ணப்பங்களில் பொருத்தமான மாணவர்களைத் தெரிவு செய்வதற்காக பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களுடன் கூடிய தேர்ச்சிக்கான நேர்முகத் தேர்வுக் குழுவொன்றின் மூலம் மேற்கொள்ளப்படும். அதற்கமைய, உத்தேச வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக பிரதமர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.(ஐ)*

# அடுத்த பாஜக தேசியத் தலைவர் யார்? ரேஸில் இருக்கும் முக்கிய புள்ளிகள்!



பாஜக தேசியத் தலைவரை விரைவில் நியமிப்பதற்கான நடவடிக்கையில் அக்கட்சி இறங்கியுள்ளது. வரும் ஜூலை 9 ஆம் தேதி முதல் 19 ஆம் தேதிக்குள் பாஜக தேசியத் தலைமையில் மாற்றம் செய்யப்படும் என பாஜக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய பாஜக தேசிய தலைவரான ஜெ.பி.நட்டாவின் பதவிக்காலம் கடந்தாண்டு ஜூன் மாதத்திலிருந்து ஓராண்டுக்கு நீட்டிக்கப்பட்டது. அந்தக் காலமும் நிறைவடைய உள்ளதால், புதிய தலைவரை தேர்வு செய்வதற்கான நடவடிக்கைகளை பாஜக தீவிரப்படுத்தியுள்ளது.

மத்திய அமைச்சர்கள் நிர்மலா சீதாராமன், பூபேந்திர யாதவ், தர்மேந்திர பிரதான், அர்ஜூன் ராம் மேக்வால், பிரஹலாத் ஜோஷி, கிஷன் ரெட்டி, பி.டி.சர்மா, டாக்டர் சுதா யாதவ் ஆகியோரில் ஒருவருக்கு வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனால், மத்திய அமைச்சரவையில் மாற்றம் செய்யப்படவும் வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது. தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலைக்கு முக்கிய பொறுப்பு வழங்கப்படலாம் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ஐ)

## சீமான் மீது டி.ஐ.ஜி. வருண்குமார் தொடர்ந்த அவதூறு வழக்கு



நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தூண்டுதல் பேரில் அவரது கட்சியினர் தம் மீதும், தம் குடும்பத்தினருக்கு எதிராகவும் சமூக வலை தளங்களில் அவதூறு கருத்துகள் பதிவிட்டு வந்தனர் என்பது திருச்சி டி.ஐ.ஜி. வருண்குமார் குற்றச்சாட்டு ஆகும்.

இது தொடர்பாக, சீமானுக்கு எதிராக வருண்குமார் தொடர்ந்த அவதூறு வழக்கு திருச்சி 4வது குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. அண்மையில் இந்த வழக்கில் கோர்ட்டில் சீமான் ஆஜராகி விளக்கம் அளித்து இருந்தார்.

அதே சமயத்தில் சீமான் மீதான அவதூறு வழக்கை ரத்து செய்ய வேண்டும் என்று கோரி மதுரை ஐகோர்ட்டில் நாம் தமிழர் தரப்பில் மனு அளிக்கப்பட்டு இருந்தது. இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிமன்றம், சீமான் மீதான அவதூறு வழக்கு விசாரணைக்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.

அடுத்தக்கட்ட விசாரணை ஆக.4ம் தேதி நடைபெறும் என்று கூறி வழக்கை நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது. (ஐ)

## ஆட்சி, அதிகாரம் நிரந்தரமல்ல: எச்சரிக்கிறார் அண்ணாமலை



" சமூக வலைத்தளப் பதிவுகளுக்காக, பா.ஜ.,வினரைக் கைது செய்யும் சிறுபிள்ளைத்தனத்தைத் தொடர்வது சரியல்ல. ஆட்சி, அதிகாரம் நிரந்தரமல்ல" என முதல்வர் ஸ்டாலினை தமிழக முன்னாள் பா.ஜ., தலைவர் அண்ணாமலை எச்சரித்துள்ளார்.

அவரது அறிக்கை: சமூக வலைத்தளப் பதிவுக்காக, தமிழக பா.ஜ.,வைச் சார்ந்த பிரவீண் ராஜ் கைது செய்யப்பட்டிருப்பது கடுமையாகக் கண்டிக்கத்தக்கது. தமிழகத்தில் பெருகி வரும் போதைப் பொருள் புழக்கம், பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள், தனியாக வசிக்கும் முதியோர்கள் கொலை செய்யப்படுவது என, சட்டம் ஒழுங்குப் பிரச்னைகள் ஆயிரம் இருக்கிறது.

ஆனால், தி.மு.க., அரசின் நிர்வாகத் தோல்விகள், சமூக வலைதளங்களில் பேசுபொருளாகி விடக்கூடாது என்பதற்காக, முழுநேரமாக தமிழக போலீசாரை, சமூக வலைதளங்களைக் கண்காணிக்க மட்டுமே பயன்படுத்திக் கொண்டிருக்க முதல்வர் ஸ்டாலினுக்கு வெட்கமாக இல்லையா? பிரதமர் மோடி, மத்திய அமைச்சர்கள், பா.ஜ., தலைவர்கள், என அனைவரையும் தரக்குறைவாக விமர்சிக்கும் தி.மு.க.,வினர் மீது புகார் கொடுத்தாலும் நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்க்கும் முதல்வர் ஸ்டாலின் அரசு, சாதாரண சமூக வலைத் தளப்பதிவுகளுக்காக, பா.ஜ.,வினரைக் கைது செய்யும் சிறுபிள்ளைத் தனத்தைத் தொடர்வது சரியல்ல. ஆட்சி, அதிகாரம் நிரந்தரமல்ல. இவ்வாறு அண்ணாமலை கூறியுள்ளார். (ஐ)

## பா.ம.க.,வில் இருந்து எம்.எல்.ஏ., அருள் நீக்கம் அன்புமணி அறிவிப்பு



சேலம் மேற்கு பா.ம.க., எம்.எல்.ஏ., அருள் கட்சியின் கட்டுப்பட்டை மீறியதாகக் கூறி அவரை கட்சியில் இருந்து நீக்குவதாக, பா.ம.க., தலைவர் அன்புமணி அறிவித்தார்.

இது குறித்து அன்புமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: பா.ம.க., கட்டுப்பாட்டை மீறும் வகையிலும், அவப்பெயரை ஏற்படுத்தும் வகையிலும் அருள் செயல்பட்டு வருகிறார். அவர் பா.ம.க., தலைமை குறித்து முதன்மை ஊடகங்களிலும், சமூக ஊடகங்களிலும் அவதூறான விமர்சனங்களை முன்வைக்கிறார்.

விளக்கம் கேட்டு 12 மணி நேரத்திற்குள் மன்னிப்பு கேட்க அறிவுறுத்தப்பட்டதை அருள் ஏற்கவில்லை. பா.ம.க., ஒழுங்கு நடவடிக்கை குழு பரிந்துரை அடிப்படையில் எம்.எல்.ஏ., அருள் கட்சியில் இருந்து நீக்கப்படுகிறார். எம்.எல்.ஏ., அருளுடன் பா.ம.க.,வினர் யாரும் எந்தவித தொடர்பும் வைத்துக் கொள்ள கூடாது. இவ்வாறு அன்புமணி கூறியுள்ளார். (ஐ)

## தமிழகம் முழுவதுமபொலிஸ் தனிப்படைகள் ஒட்டுமொத்தமாக கலைப்பு



தமிழகம் முழுவதும் மாவட்டம், மாநகரங்களில் செயல்பட்டு வந்தபொலிஸ் தனிப்படைகளை கலைத்து டி.ஜி.பி., சங்கர் ஜிவால் உத்தரவிட்டுள்ளார்.

திருப்புவனத்தில், நகைகள் திருடுபோன புகாரின் பேரில் அஜித்குமார் என்ற வாலிபர் காவல்துறை விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். விசாரணையின் போது போலீசார் தாக்கியதில் அவர் உயிரிழந்த விவகாரம், தமிழக அரசுக்கு பெரும் தலைவலியாக மாறியது. இதில், எதிர்க்கட்சிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும், போலீசாரையும், தமிழக அரசையும் விமர்சனம் செய்து வருகின்றனர்.

இதையடுத்து, சிவகங்கை பொலிஸ் எஸ்.பி.,யை காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றியும், மானாமதுரை டி.எஸ்.பி.,யை சஸ்பெண்ட் செய்தும், குற்றம் சாட்டப்பட்ட பொலீசாரை கைது செய்தும், அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. வழக்கும் சி.பி.ஐ., விசாரணைக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்துக்கு முக்கிய காரணமாக இருந்தது, போலீஸ் தனிப்படை என்று விசாரணையில் தெரியவந்துள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும், மாநகரிலும், தனிப்படை என்ற பெயரில் போலீசார், அந்தந்த உயர் அதிகாரிகளின் தலைமையில் செயல்படுவது வழக்கம்.இந்த பொலிசார் அனைவரும், வெவ்வேறு ஸ்டேஷன்களில் பணிப்பட்டியலில் இருந்தாலும், அவர்கள் உயர் அதிகாரிகளின் கூடவே இருந்து, அவர்கள் கூறும் செயல்களை மட்டுமே செய்வது வாடிக்கை. சட்ட விரோதமான செயல்பாடுகளுக்கு உதவியாக இருப்பதற்காகவே, தங்களுக்கு நெருக்கமான போலீசாரை, இந்த தனிப்படைகளில் உயர் அதிகாரிகள் வைத்துக்கொள்கின்றனர்.


இத்தகைய தனிப்படை பொலீசார், நாளடைவில் தாங்களாகவே முன்னின்று சட்ட விரோத காரியங்களில் ஈடுபடுவதும் வழக்கம். எனினும், அவர்கள் உயர் அதிகாரிகளின் செல்லப்பிள்ளைகளாக இருப்பதால் அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் இருக்காது.

இலை மறைவு காய் மறைவாக இருந்த இத்தகைய தனிப்படையினர் அத்துமீறல், சிவகங்கை அஜித் குமார் மரணத்துக்கு பிறகு, வெட்ட வெளிச்சம் ஆகியுள்ளது. இதனால் அரசுக்கு அவப்பெயர் ஏற்படுவதை உணர்ந்த தமிழக டி.ஜி.பி., உடனடியாக தனிப்படைகளை கலைக்கும்படி அந்தந்த உயர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

குற்றச் செயல்கள் நடக்கும்போது, அதன் தன்மைக்கு ஏற்ப உரிய நோட்டீஸ் கொடுத்து தனிப்படைகள் அமைத்து விசாரிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

# கறுப்பு வெள்ளைப் பூக்கள்!

–வெண்பா



ஒரு நாள் பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்த போது, இணையத்தில் வைரலாகிக் கொண்டிருந்த ஒரு காணொளியைப் பார்க்க நேர்ந்தது. மனதை நெகிழ வைக்கும் அந்தக் காணொளியில் ஒரு மணப்பெண் மணமகனுக்கு ஒரு கண்ணாடியைப் பரிசளிக்கிறாள். அந்தக் கண்ணாடியை அணிந்ததும் அந்த மணமகனின் முகத்தில் பரவிய புன்னகை என்னுள்ளும் தொற்றிக்கொண்டது. அப்படி அந்த கண்ணாடியில் என்ன இருந்தது? அந்தக் கண்ணாடி வழக்கமாக நாம் அணியும் கண்ணாடிகளில் இருந்து சற்று வித்தியாசமானது. நிற வேறுபாடை உணர முடியாதவர்களுக்காகப் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டதுதான் அந்தக் கண்ணாடி. அதாவது, 'கலர் பிளைண்ட்னஸ்' (நிறக் குருடு) என்று சொல்லக்கூடிய ஒருவகை குறைபாட்டால் பாதிக்கப்பட்டவர்களுக்காகத் தனித்துவமாக உருவாக்கப்பட்டது.

குழந்தை வளர்ப்பில் நிறங்களின் பெயர்களையும் அவற்றின் வேறுபாடுகளையும் சொல்லித் தருவதுதான் முதல் படி. குழந்தைகள் வளர வளர நிறங்களின் வேறுபாடுகளை அவர்கள் மூளை கொஞ்சம் கொஞ்சமாக அறிய தொடங்கும். அதனால்தான் குழந்தைகள் நிறங்களால் எளிதாகக் கவரப்படுகின்றனர். குறிப்பாக அவர்களுக்கான பொம்மைகளும் ஆடைகளும் அத்தனை வண்ணமயமிக்கதாக இருப்பதற்கும் இதுதான் காரணம். பல நிறங்களில் இருக்கும் பந்துகளைக் குழந்தை முன் காட்டி, இது என்ன கலர் என்று கேட்பது நாம் அனைவரும் செய்யக்கூடிய ஒன்று. இது மூளையின் ஒரு குறிப்பிட்ட பகுதியைத் தூண்டிவிடுகிறது. சூரிய உதயத்தின் போதும் அஸ்தமனத்தின் போதும் உருவாகும் இளமஞ்சள் மற்றும் இளஞ்சிவப்பு நிறங்கள் நம்மை அமைதிப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் நமக்குப் புத்துணர்வும் அளிக்கிறது. அதுபோல கடலின் நீலமும், காடுகளின் பசுமையும் நமக்குப் பரவசத்தைத் தருகிறது. வண்ணங்கள் யாவும் மனித உணர்வுகளோடு தொடர்புடையவை. ஒருவேளை நம் மூளை இந்த நிறங்களின் வேறுபாடுகளை உணராமல் போய் இருந்தால் எப்படி இருக்கும்?



மனிதனால் நிறங்களின் வேறுபாடுகளை உணர முடியாமல் போகும் நிலையைத்தான் 'நிறக் குருடு' என்கிறார்கள். ஒளியின் பிரதிபலிப்பாக இருக்கும் வண்ணங்களில் சிலவற்றை, சில மனிதர்களால் வேறுபடுத்திப் பார்க்க முடியாது. உதாரணமாகச் சிவப்பு, பச்சை போன்ற நிறங்களை வேறுபடுத்திப் பார்ப்பதில் சிலருக்குச் சிரமம் இருக்கும். சிலருக்கு நீல நிறத்தை வேறுபடுத்திப் பார்ப்பது கடினமாக இருக்கும். ஆனால், நிறக் குருடு என்பது பெரும்பாலும் எல்லா நிறங்களுக்கும் பொதுவானது. அதில் மக்களிடையே பொதுவாகக் காணப்படுவதுதான் இந்தச் சிவப்பு மற்றும் பச்சை நிறங்களின் வித்தியாசங்களை உணர முடியாமல் இருப்பது. இது தவிர க்ரே, பின்க், வைல்ட் போன்ற நிறங்களுக்கான வித்தியாசங்களைச் சிலரால் கண்டுபிடிக்க முடியாது. இப்படி நிறங்களின் வித்தியாசங்களைக் கண்டறிய முடியாமல் இருப்பவர்கள் நிறக் குருடு குறைபாடால் பாதிக்கப்பட்டவர்கள்.

இந்தக் குறைபாடு மரபணுக்கள் வழியாக ஒரு தலைமுறையில் இருந்து இன்னொரு தலைமுறைக்கு கடத்தப்படும். ஒ குரோமோசோமில் ஏற்படும் மரபணு பிறழ்வால் இந்த நிறக் குருடு ஏற்படுகிறது. ஒ குரோமோசோமில் பாதிப்பு ஏற்படுவதால் இந்தக் குறைபாடு பெண்களைவிட ஆண்களை அதிகமாகப் பாதிக்கிறது. முந்தைய தொடர்களில் சொன்னது போல பெண்களுக்கு இந்தக் குறைபாடு ஏற்படுவதற்கு அவர்களுக்கு இருக்கும் இரண்டு ஒ குரோமோசோம்களுமே பாதிக்கப்பட வேண்டும். ஆனால், அப்படி இரண்டு குரோமோசோம்களுமே பாதிக்கப்படுவது என்பது குறைவாக நிகழக்கூடிய ஒன்று. ஆனால், ஆண்களுக்கு இது எளிதாக ஏற்படக் கூடிய ஒன்று. காரணம் அவர்களுக்கு ஏற்கெனவே ஒரே ஒரு ஒ குரோமோசோம்தான் இருக்கிறது.

இது தவிர, வானவில்லில் இருக்கும் ஏழு நிறங்களும் ஒன்றோடு இன்னொன்று தொடர்புடையவை. இந்த வண்ணங்களுக்கு இடையே இருக்கும் தொடர்புகளை வேறுபடுத்திப் பார்ப்பதற்கென்றே மூளையில் ஒரு பகுதி இருக்கிறது. விபத்துகள் மூலம் இந்தப் பகுதியில் ஏற்படும் பாதிப்புகள் காரணமாகச் சிவப்பு, பச்சை, நீலம் போன்ற நிறங்களை வேறுபடுத்திப் பார்ப்பதில் சிக்கல் ஏற்படுகிறது. பிறவியில் இருந்தே இருக்கும் நிறக் குருடு குறைபாட்டிற்கு மரபணுக்கள் காரணமாக இருக்கலாம். ஆனால், விபத்துகள் மூலம் ஏற்படும் பாதிப்புகளால் இடைப்பட்ட காலத்தில்கூட ஒருவருக்கு நிறக் குருடு ஏற்படும் வாய்ப்பு இருக்கிறது. சரி, இதனால் தினசரி வாழ்க்கையில் என்ன விளைவுகள் ஏற்படப் போகின்றன என்கிற கேள்வி நம் எல்லோரிடமும் உண்டாகும் ஒரு பொதுவான கேள்விதான். இந்தக் கேள்வியைச் சற்று ஆழமாக அணுக வேண்டும். நிறக் குருடு உள்ள ஒருவர் சாலையில் செல்லும் போது அங்கே இருக்கும் போக்குவரத்து விளக்குகளில் பிரதானமாக இருக்கும் பச்சை மற்றும் சிவப்பு நிறங்களை வேறுபடுத்திப் பார்த்து அதற்கேற்ப வாகனத்தை இயக்க வேண்டும். ஆனால், இது அவர்களுக்கு அவ்வளவு எளிதான செயல் அல்ல. ஒரு நிமிடம் தாமதித்தாலும்கூட அது அந்த நபருக்கு ஆபத்தை விளைவிக்கும்.


அது போல மின்சாரம் மற்றும் மின்னணுவியல் **(electronics)** துறை சார்ந்தவர்களுக்கும் இந்தக் குறைபாடு பெரும் சவாலாக இருக்கும். காரணம், இந்தத் துறைகளில் பயன்படுத்தப்படும் கம்பிகள் அனைத்தும் பச்சை, சிவப்பு மற்றும் நீல நிறங்களில் இருக்கின்றன. இதனால் அவற்றைக் கண்டறிந்து வேலை பார்ப்பது என்பது நிறக் குருடு உடையவர்களுக்குப் பெரும் சவாலான ஒன்று. போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறைகளில் வேலை பார்ப்பதற்கு நடத்தப்படும் தகுதி தேர்வுகளில் "நிறக் குருடு தேர்வு" மிக முக்கியமானது. இந்தத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களால் மட்டும்தான் இது போன்ற துறைகளில் வேலை பார்க்க முடியும்.



நிறக் குருடு குறைபாட்டை முற்றிலுமாகக் குணப்படுத்த முடியாது என்றாலும் சிகிச்சைகள் மூலம் அந்தக் குறைபாட்டின் பாதிப்புகளைக் குறைக்க முடியும். அதில் ஒன்றுதான் இணையத்தில் வைரலான வீடியோவில் வரும் கண்ணாடி. இந்தக் கண்ணாடியை அணிந்துகொள்ளும் போது நிறக் குருடு உள்ளவர்களால் மற்றவர்களைப் போல நிறங்களுக்கு இடையே இருக்கும் வேறுபாடுகளைக் கண்டறிய முடியும். இந்தக் கண்ணாடியில் இருக்கும் ஃ பில்டர்ஸ் வழியாக ஒரு நிறத்தையும் மற்றொரு நிறத்தையும் அதன் வித்தியாசங்களைக் கொண்டு தனித்தனியாகப் பிரித்துப் பார்க்க முடியும். கண்ணாடியைப் போலவே இந்தக் குறைபாட்டைக் கடந்து வர பிரத்யேகமான லென்ஸ்களும் தயாரிக்கப்படுகின்றன. இந்தக் குறைபாடு நரம்பு மற்றும் மூளையோடு தொடர்புடையதால் இதை லேசர் போன்ற அதிநவீன சிகிச்சை முறைகளால் குணப்படுத்த முடியாது.

இதுவரை ஓரிரு நிறங்களை வேறுபடுத்திப் பார்ப்பதில் ஏற்படும் சிரமங்களையும் விளைவுகளையும் பற்றிப் பார்த்தோம். ஆனால், உலகின் அத்தனை நிறங்களும் கறுப்பு வெள்ளையாக மாறினால் எப்படி இருக்கும்? அப்படி ஒரு நிலைதான் ஏக்ரோமாடோப்சியா (யஉாசழஅயவழிளயை). இதுவும் ஒருவகையான நிறக் குருடு குறைபாடுதான். இந்தக் குறைபாடுடையவர்களால் எந்த நிறத்தையும் பார்க்க முடியாது. அத்தனை நிறங்களும் கறுப்பு வெள்ளையாக மட்டுமே காட்சியளிக்கும். இதற்கென்றே தனித்துவமாக உருவாக்கப்பட்ட கண்ணாடிகளைக் கொண்டு இதை ஓரளவு கடக்க முடியுமே தவிர, இதையும் முழுமையாகக் குணப்படுத்த முடியாது. இது போன்ற நிறக் குருடு குறைபாடுடையவர்கள் குழந்தைக்காகத் தயாராகும் போது மரபியல் ஆலோசகர்களின் ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் கேட்டறிவது அவசியம். வருங்காலத் தலைமுறைகள் இது போன்ற மரபணு குறைபாடுகளால் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு இதுதான் சிறந்த வழி. இந்தக் குறைபாடு விபத்துகள் மூலம் ஏற்படும் பாதிப்புகளால்கூட ஏற்படலாம் என்பதால் போக்குவரத்து, மின்சாரத் துறைகளில் வேலை பார்ப்பவர்கள் நிறக் குருடு தேர்வில் தேர்ச்சி பெற்று, அதற்கான உரிய தகுதி சான்றிதழை வைத்திருக்க வேண்டும். இதன் மூலம் அவர்களின் கண் பார்வைத் திறனை அறிவதோடு, அறியாமையால் ஏற்படும் சில முக்கியமான விபத்துகளையும் தவிர்க்கவும் முடியும்.

# அடுத்த தலாய் லாமா யார் வாரிசை தேர்வு செய்ய மறுப்பு அறக்கட்டளைக்கு அளித்தார் அதிகாரம்!



தற்போதைய 14வது தலாய் லாமா, புதிய வாரிசை அறிவிக்க மறுத்துவிட்டார். புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்க திபெத் அறக்கட்டளைக்கு அதிகாரம் அளித்தார்.

நம் அண்டை நாடான திபெத், 1959ம் ஆண்டு முதல், சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ளது. புத்த மத தலைவரான தலாய்லாமா தான் இந்த நாட்டின் ஆட்சியாளர். ஆனால் சீனாவின் அச்சுறுத்தல் காரணமாக, தற்போதைய தலாய் லாமா, சிறுவயதாக இருந்த போதே இந்தியாவில் அரசியல் தஞ்சம் புகுந்து விட்டார்.

அவருடன் வந்த லட்சக்கணக்கான திபெத் மக்கள், இந்தியாவில் வசிக்கின்றனர். இவர்கள், திபெத் மீதான சீனாவின் ஆட்சியை ஏற்பதில்லை. தங்களுக்கென நாடு கடந்த திபெத் அரசாங்கத்தை அமைத்து நிர்வாகம் செய்து வருகின்றனர். தற்போது மத தலைவராக இருக்கும் தலாய்லாமா, 14வது தலாய்லாமா ஆவார்.


இவர் இந்த மாதம் வாரிசை அறிவிக்க இருப்பதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில், இன்று (ஜூலை 02) அவர் வாரிசை தேர்வு செய்ய மறுப்பு தெரிவித்தார். அவர் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்க திபெத் அறக்கட்டளைக்கு அதிகாரம் அளித்தார். இது குறித்து தலாய் லாமா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கடந்த 2011ம் ஆண்டு செப்டம்பர் 24ம் தேதியே புதிய தலாய் லாமாவை அங்கீகரிப்பதற்கான நடைமுறை குறித்துத் தெளிவாக விளக்கி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. புதிய தலாய் லாமாவை தேர்வு செய்யும் பொறுப்பு, தலாய் லாமாவின் அலுவலகமான கடென் போட்ராங் அறக்கட்டளையின் உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

அவர்கள் திபெத்திய புத்த மரபுகளின் பல்வேறு தலைவர்களை சந்தித்து கலந்து ஆலோசிக்க வேண்டும். யாருக்கும் அதிகாரம் இல்லை எதிர்கால மறுபிறப்பை அங்கீகரிக்கும் முழு அதிகாரம் கடென் போட்ராங் அறக்கட்டளைக்கு மட்டுமே உள்ளது. இந்த விஷயத்தில் தலையிட வேறு யாருக்கும் எந்த அதிகாரமும் இல்லை. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

சீனா என்ற வார்த்தையை அவர் குறிப்பிடவில்லை என்ற போதிலும், அவர், எதிர்காலத்தில் புதிய தலாய் லாமாவை தேர்வு செய்யும் பொறுப்பு வேறு யாருக்கும் இல்லை என்பதை மிகத் தெளிவுப்படுத்தி உள்ளார். (ஐ)

## புலம்பெயர்தல் கட்டுப்பாடுகளை நெகிழ்த்துங்கள் கனேடிய மாகாணம் ஒன்று வலியுறுத்தல்



வடக்கு பிரிட்டிஷ் கொலம்பியாவிலுள்ள உள்ளூர் சமூகத் தலைவர்கள், புலம்பெயர்தல் கட்டுப்பாடுகள் தங்கள் வணிகத்தை அச்சுறுத்துவதாகக் கூறி, தொழிலாளர் நெருக்கடியைத் தீர்க்க தக்க நடவடிக்கை எடுக்குமாறு கனடா அரசைக் கோரியுள்ளார்கள்.

கனடாவின் மூன்றாவது பெரிய துறைமுகம் பிரிட்டிஷ் கொலம்பியாவிலுள்ள பிரின்ஸ் ரூபர்ட் நகரில்தான் உள்ளது.

ஆனால், புலம்பெயர்தல் மற்றும் பணி அனுமதி கொள்கைகளில் கனடா அரசு மேற்கொண்ட மாற்றங்களால், 14,000 பேர் வசிக்கும் அந்நகரத்தின் உள்ளூர் பொருளாதாரம் ஆபத்தில் உள்ளது என்கிறார் ஊழஅஅரைவைல குரவரசநள னுநளடழிஅநவெ ஊழசிழசயவழைெ என்னும் அமைப்பின் நிர்வாக இயக்குனரான ஜான் ஃபாரெல்.

அரசின் இரண்டு கட்டுப்பாடுகளால் தங்கள் நகர தொழில்கள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கிறார் அவர்.

ஒன்று, தற்காலிக வெளிநாட்டு தொழிலாளர் திட்டம் (வுகுறு). இரண்டு சர்வதேச மாணவர்கள் மீதான கட்டுப்பாடுகள்.

அதாவது, தனது உணவகத்தின் 90 சதவீத பணியாளர்களும் இந்த திட்டங்கள் மூலமாகத்தான் தன்னிடம் பணியாற்றுவதாக தெரிவிக்கும் ஜான், அரசு இந்த தற்காலிக வெளிநாட்டு தொழிலாளர் திட்டம் மற்றும் சர்வதேச மாணவர்கள் மீது விதித்த கட்டுப்பாடுகளால் தங்கள் வணிகம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கிறார்.

புலம்பெயர்தல் கட்டுப்பாடுகளை நெகிழ்த்துங்கள்... கனேடிய மாகாணம் ஒன்று வலியுறுத்தல் ; ழேசவாநசெ டீஉ ருசபந குடநஒடைடந ஐஒ வுகறீழடைஉல

அவரைப்போலவே வேலைக்கு இந்த தற்காலிக வெளிநாட்டு தொழிலாளர்கள் மற்றும் சர்வதேச மாணவர்களை நம்பியிருக்கும் மற்ற வணிக உரிமையாளர்களும், எங்கள் வணிகம் ஒரே இரவில் மறைந்துவிடும், எங்கள் வாடிக்கையாளர்கள் அனைவரும் அவர்களுக்குத் தேவையான சேவையை வழங்கத் தேவையான ஆட்கள் இல்லையென்றால் ஏமாற்றமடைவார்கள் என்கிறார்கள்.

அரசு இந்தக் கொள்கைகள் தொடர்பில் சரியான நடவடிக்கை எடுக்காவிட்டால், உண்மையில் எங்கள் நகரம் நிலைகுலைந்துவிடும் என எச்சரிக்கிறார் ஜான்.

ஆகவே, புலம்பெயர்தல் மற்றும் தற்காலிக வெளிநாட்டு தொழிலாளர் திட்டம் ஆகிய கொள்கைகளின் தாக்கத்தை மறுபரிசீலனை செய்யுமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொள்வதாகவும், அது தொடர்பில் நாடாளுமன்றத்துக்கு முறைப்படி கோரிக்கை அனுப்ப உள்ளதாகவும் தெரிவித்துள்ளார் அவர். (ஐ)



## 60 நாள் காசாவில் போர் நிறுத்தத்திற்கு இஸ்ரேல் ஒப்புதல் அதிபர் டிரம்ப் அறிவிப்பு

'60 நாள் காசாவில் போர் நிறுத்தம் செய்வதற்கான நிபந்தனைகளுக்கு இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளது" என அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அறிவித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் படையினருக்கு இடையே போர் நடந்து வருகிறது. இதனால் காசாவில் இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் பாலஸ்தீனர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டு உள்ளனர். இந்நிலையில், "60 நாள் காசா போர் நிறுத்தம் செய்வதற்கான நிபந்தனைகளுக்கு இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளது" என டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து, சமூக வலைதளத்தில் டிரம்ப் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: காசா விவகாரத்தில் இஸ்ரேலியர்களுடன் எனது பிரதிநிதிகள் இன்று பேச்சுவார்த்தை நடத்தினர். 60 நாள் காசாவில் போர் நிறுத்தம் ஏற்படுத்துவதற்கான நிபந்தனைகளுக்கு இஸ்ரேல் ஒப்புக் கொண்டுள்ளது.

அதேநேரத்தில் போரை முடிவுக்குக் கொண்டு வர அனைத்து தரப்பினருடனும் இணைந்து பணியாற்றுவோம். அமைதியைக் கொண்டுவர வேண்டும். மத்திய கிழக்கின் நன்மைக்காக, ஹமாஸ் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். இவ்வாறு டிரம்ப் கூறியுள்ளார். (ஐ)

## ஏழை நாடுகளுக்கு உதவி நிறுத்தம் ராணுவத்துக்கு அதிக நிதி:

வறுமையில் வாடும் மக்களுக்கு உதவியா அல்லது நாட்டின் பாதுகாப்பா? எதற்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள் என்ற கேள்விக்கு, நாட்டின் பாதுகாப்புதான் முக்கியம் என கூறும் நிலையில் பல நாடுகள் உள்ளன.

ஏழை நாடுகளுக்கு உதவி குறைப்பு, பாதுகாப்புக்கு அதிக நிதி

அவ்வகையில், ஜேர்மனியும் தனது பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில், வறுமையில் வாடும் நாடுகளுக்கு வழங்கும் நிதியைக் குறைத்து, நாட்டின் பாதுகாப்புக்கு அதிக நிதியை ஒதுக்க முடிவு செய்துள்ளது.

2025ஆம் ஆண்டுக்கான ஜேர்மனியின் வரைவு பட்ஜெட்டில் கடுமையான வெட்டுக்கள் காணப்படுகின்றன.

குறிப்பாக, பொருளாதார கூட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு அமைச்சகத்துக்கு முந்தைய ஆண்டைவிட ஒரு பில்லியன் யூரோக்கள் குறைவாக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனால் பல தொண்டு நிறுவனங்களும், அவற்றை நம்பியிருக்கும் மக்களும் கடுமையாக பாதிக்கப்பட இருக்கிறார்கள்.



இந்நிலையில், பொருளாதார கூட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு அமைச்சரான ரீம் அலபாலி ராடோவன் (சுநநஅ யுடயடியடை சுயனழஎயஉ), கூட்டணி அரசின் பட்ஜெட் கடும் வேதனையை ஏற்படுத்துவதாக இருந்தாலும், ஜேர்மனி உலக அளவில் நிறைவேற்றவேண்டிய தனது கடமையை நிறைவேற்ற உறுதி பூண்டுள்ளது என்று கூறியுள்ளார். (ஐ)

## ஓமந்தையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வவுனியா - ஏ 9 வீதி வழியாக மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் பாதுகாப்பற்ற ரயில் கடவை ஊடாக பறநாட்டாங்கல் வீதிக்கு ஏற முற்பட்டபோது யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தாயும் மகளும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மோட்டார் சைக்கிள் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

விபத்தையடுத்து குறித்த ரயில் அரைமணிநேரம் தாமதமாகவே கொழும்பு நோக்கிப் பயணித்தது.

## நிந்தவூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உப தவிசாளராக ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் உறுப்பினர் சட்டத்தரணி எம்.எல்.இர்பானும் தெரிவாகினர்.

நிந்தவூர் பிரதேச சபையின் புதிய தவிசாளர்,,உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரும் தலைமை தாங்கும் அதிகாரியுமாகிய ஆதம்லெப்பை முகம்மது அஸ்மி தலைமையில் சபை மண்டபத்தில் இன்று நடைபெற்றது.

புதிய தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த 13 உறுப்பினர்கள் கூட்ட மண்டபத்தில் சமூகமளித்திருந்தனர்.

நிந்தவூர் பிரதேச சபையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பில் 6 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பில் 4 உறுப்பினர்களும், தேசிய மக்கள் கட்சி சார்பில் 2 உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சக்தி கட்சி சார்பில் ஓர் உறுப்பினரும் என 13 பேர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இன்றைய விசேட அமர்வின்போது உள்ளூராட்சி ஆணையாளர் புதிய தவிசாளருக்கான முன்மொழிவுகளைக் கோரினார்.

இந்நிலையில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இருவர் புதிய தவிசாளர் தெரிவுக்காகச் சபையில் உறுப்பினர்களினால் பிரேரிக்கப்பட்டனர். இதனையடுத்துப் பகிரங்க வாக்கெடுப்பா அல்லது இரகசிய வாக்கெடுப்பா எனச் சபையில் விடப்பட்டது. இதன்போது சிறு இழுபறிக்குப் பின்னர் பெரும்பாலான உறுப்பினர்கள் இரகசிய வாக்கெடுப்பைக் கோரினர். இதற்கமைய உறுப்பினர்களால் பிரேரிக்கப்பட்டு வழிமொழியப்பட்ட இரண்டு புதிய தவிசாளர் தெரிவு உறுப்பினர்களும் இரகசிய வாக்குமூலத்தின் அடிப்படையில் ஏனைய உறுப்பினர்களால் புதிய தவிசாளராகத் தெரிவு செய்யக் கோரப்பட்டது.

இதன்போது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்ட ஆதம்பாவா அஸ்பர் 6 வாக்குகளைப் பெற்று நிந்தவூர் பிரதேச சபையின் புதிய தவிசாளராகத் தெரிவானார். அவருக்கு எதிராகப் போட்டியிட்ட அதே கட்சியைச் சேர்ந்த சட்டத்தரணி ஆதம்லெப்பை றியாஸ் ஆதம் 5 வாக்குகளைப் பெற்றார்.

தவிசாளர் தெரிவுக்கான இரகசிய வாக்கெடுப்பின்போது தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் இருவர் நடுநிலை வகித்தனர்.

அதையடுத்து உப தவிசாளர் தெரிவு நடைபெற்றது. உப தவிசாளராக ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் உறுப்பினர் சட்டத்தரணி முகம்மது இப்ராலெப்பை இர்பான் தெரிவு செய்யப்பட்டார். ஏனைய தரப்பில் இருந்து போட்டிக்கு யாரும் முன்வராததமையால் சபையில் ஏகமனதாக உப தவிசாளராக சட்டத்தரணி முகம்மது இப்ராலெப்பை இர்பான் தெரிவானார்.

இன்றைய தெரிவு நடவடிக்கையை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் எம்.பி. நேரில் வந்து கண்காணித்தார்.

இதேவேளை, நிந்தவூர் பிரதேச சபையைச் சுற்றிப் பொலிஸார் இன்று பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதனை அவதானிக்க முடிந்தது.

## அர்ச்சுனவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கோரி சமூகச் செயற்பாட்டாளரான ஓஷல ஹேரத் என்பவரால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மாயாதுன்ன கொரயா மற்றும் மஹேன் கொபல்லவ ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது மனுதாரர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி அசோக் பரன்,

"இராமநாதன் அர்ச்சுனா யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்பட்ட காலப் பகுதியில் வைத்தியர் துறையில் இருந்து பணி இடை நீக்கம் செய்யப்பட்டிருந்துள்ளார்."

இதனால் அரசமைப்புச் சட்டத்தின்படி இராமநாதன் அர்ச்சுனா நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்குத் தகுதியற்றவர்." - என்று தெரிவித்தார்.

இருப்பினும், நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்காக ஆஜரான சட்டத்தரணி சேனானி தயாரத்ன, தனது கட்சிக்காரர் நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது சம்பளம் இன்றி சேவையில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டதால், அவரை ஓர் அரச ஊழியராகக் கருத முடியாது என்று குறிப்பிட்டார்.

அதன்படி, அவர் நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு எந்தச் சட்டத் தடையும் இல்லை என்று சட்டத்தரணி சேனானி தயாரத்ன குறிப்பிட்டார்.

இரு தரப்பினரும் முன்வைத்த வாதங்களைப் பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானித்தது.

இதேவேளை, இந்த மனு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனவும் நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டது.

எவ்வாறாயினும், நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கு நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பது மற்றும் வாக்களிப்பதைத் தடுக்கும் வகையில் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பிக்கப் போவதில்லை என்று நீதிமன்ற அமர்வு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆலயத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முனைக்காடு கிராமத்தில் அமைந்துள்ள நாகதம்பிரான் ஆலயத்தில் வருடாந்த அலங்கார உச்சவம் இடம்பெற்று வரும்நிலையில், ஆனி உத்தர நாளான இன்று அதிகாலை வேளை விசேட பூஜை இடம்பெற்றது.

இதன்போது, மேற்படி சிறுவன் பாம்புப் புற்றுக்குப் பாலூற்றி விட்டு அதனருகில் நின்றபோது அருகில் இருந்த மின்குமிழுக்கு இணைக்கப்பட்டிருந்த மின் வடத்தில் இருந்த மின் ஒழுக்கு காரணமாக சிறுவனுக்கு மின்சாரம் தாக்கிய நிலையில் அந்தச் சிறுவன் உயிரிழந்துள்ளார்.

முனைக்காடு கிராமத்தைச் சேர்ந்த 16 வயதான சென்தில்குமரன் கியோபன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் சம்பவ இடத்துக்குச் சென்ற கொக்கட்டிச்சோலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சடலம் மகிழடித்தீவு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## தேசபந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைமையில் மற்றும் நீதிபதி டபிள்யூ.எம்.என்.பி. இத்தவல மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் ஈ.டபிள்யூ.எம்.லலித் ஏக்கநாயக்க ஆகியோர் அடங்கிய விசாரணைக் குழு முன்னிலையில் நேற்று முறைப்பாட்டாளர் சார்பிலான இரண்டு சாட்சியாளர்கள் சாட்சியளித்தனர்.

உத்தியோகபூர்வ பணிக்காக வெளிநாடு சென்றிருந்த முறைப்பாட்டாளரின் சாட்சியாளர்கள் இருவரிடம் இருந்து கடந்த 26ஆம் திகதி வியாழக்கிழமைக்குப் பின்னர் சாட்சிகளைப் பெற்றுக்கொள்ள சட்டமா அதிபர் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி விசாரணைக் குழுவில் கலந்துகொண்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி திலீப பீரிஸ் மற்றும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ரஜித பெரேரா மற்றும் பொலிஸ்மா அதிபரின் தரப்பினர் இணங்கிக்கொண்டதற்கு அமைய, இந்த இரண்டு சாட்சியாளர்களும் சாட்சிய மளித்தனர்.

அத்துடன், இரு தரப்பின் எழுத்துமூல சமர்ப்பிப்புக்களையும் எதிர்வரும் 8ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு முன்னர் குழு முன்னிலையில் சமர்ப்பிப்பதற்கும் சட்டமா அதிபரின் பிரதிநிதிகளும் பிரதிவாதியின் தரப்பினரும் இணங்கியுள்ளனர்.

# யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது டெய்சி பாட்டிக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்!

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டி டெய்சி ஃபாரெஸ்ட் ஆகியோருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இன்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் அபேரத்ன முன்னிலையில் பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் இந்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பின்னர் இரு பிரதிவாதிகளையும் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதியளித்தது.

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை வந்துள்ள இந்திய பெரு நிறுவனங்களின் பிரதம நிறைவேற்று அதிகாரிகளுக்கான வரவேற்பு நிகழ்வு கொழும்பு ஐ.டி.சி. ரத்னதீப ஹோட்டலில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்காண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாங்கள் இலங்கைக்கு மிக ஆழமாக அர்ப்பணிப்புடன் இருக்கின்றோம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். கடந்த 13 அல்லது 14 ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது கடந்த மூன்று ஆண்டுகளில் இரண்டு மடங்குக்கும் அதிகமாக உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

2022இல் நாங்கள் இலங்கைக்கு வழங்கிய அவசரகால உதவியின்போது வழங்கப்பட்ட கடன்களுக்கான மறுசீரமைப்பு இம்பெற்றுள்ளது. இதன் மூலம் இந்தியா இலங்கையின் மிகவும் நம்பகமான நண்பராகவும், மிகவும் நம்பத்தகுந்த பங்காளியாகவும் உள்ளது என்பதைத் தெரிவிக்கிறோம்.

இந்த நன்மைகள் இலங்கைக்கு அதிகமாக இருந்தாலும் நாங்கள் பொருட்படுத்தமாட்டோம், ஏனென்றால் இலங்கை எமது சகோதர நாடு. இன்று நாம் இதுவரை கண்டிராத மிகச் சிறந்த உறவைக் கொண்டிருக்கின்றோம்." - என்றார்.

# 'ஸ்டார்லிங்க்' இணைய சேவை இலங்கையில் இன்று முதல் ஆரம்பம்!

'ஸ்டார்லிங்க்' இணைய சேவையை இலங்கையில் இன்று முதல் பெற்றுக்கொள்ள முடியும் என எலோன் மஸ்க் தனது "ஓ"கணக்கில் அறிவித்துள்ளார்.

'ஸ்டார்லிங்க்' இணைய சேவை இலங்கையில் தற்போதுள்ள ஃபைபர் தொழில்நுட்ப இணைய சேவையை விட பல மடங்கு வேகமாக இருக்கும் என்பதால், உலகில் எங்கிருந்தும் இந்த சேவையை அணுக உதவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இணைய சேவைகளை வழங்க ஸ்டார்லிங்க் லங்கா (தனியார்) நிறுவனத்திற்கு "தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்" உரிமத்தை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு கடந்த 2024 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி வழங்க நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சர்வஜன அதிகாரத்தின் உறுப்பினர் ஒருவர் இடைநிறுத்தம்!

சர்வஜன அதிகாரத்தின் உறுப்பினர் சத்துன் இரங்கிக்கவின் கட்சி உறுப்புரிமையை உடனடியாக இடைநிறுத்துவதற்கு சர்வஜன அதிகாரம் நடவடிக்கை எடுத்துள்ளதாக சர்வஜன அதிகாரத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் செனவிரத்னவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்ட கடிதத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பதியதலாவ பிரதேச சபையில் அதிகாரத்தை நிறுவுவதில் கட்சியின் அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயல்பட்டதன் காரணத்தினால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் பாரபட்சமற்ற ஒழுக்காற்று விசாரணையைத் தொடர்ந்து இறுதி முடிவு எடுக்கப்படும் வரை அவரின் கட்சி உறுப்புரிமை உடனடியாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் புதிய திட்டம்!

அணுசக்தி விபத்தின் போது நாட்டிற்கு ஏற்படும் கதிர்வீச்சு விளைவுகளை கண்காணிக்கக்கூடிய முன்கூட்டிய எச்சரிக்கை கட்டமைப்பை ஸ்தாபிக்க இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை திட்டமிட்டுள்ளது.

இதற்காக இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை, சர்வதேச அணுசக்தி முகமையுடன் இணைந்து செயற்பட திட்டமிட்டுள்ளது.

கற்பிட்டி, மன்னார், நெடுந்தீவு, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளில் இந்த கட்டமைப்புகள் நிறுவப்படவுள்ளதாக இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் ஆய்வு மற்றும் அமுலாக்கப்பிரிவின் பணிப்பாளர் பிரகீத் கடதுன்ன தெரிவித்துள்ளார்.

குறித்த கட்டமைப்பின் ஊடாக நாட்டிற்கு அருகிலுள்ள நாடுகளில் உள்ள அணுசக்தி நிலையங்களில் ஏற்படும் இயற்கையான அல்லது செயற்கை விபத்துகளின் போது நாட்டிற்குள் வரும் கதிர்வீச்சை அவதானிக்க முடியும் என வலுசக்தி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.07.2025 வெளியிடப்பெற்றது.